O.S.56/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:21.09.2023

பி.வா.சா.1–முத்தையா த/பெ – ராமசாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் டிப்ளமோ இன்ஜினியரிங் படித்துள்ளேன். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதில் வழக்குரையை நான் படித்து பார்த்தேன். நான் தபசில் சொத்தை பவர் பத்திரத்தின் அடிப்படையில் 7ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெருமாள் சாமி எனக்கும், எனது மனைவிக்கும் பவர் கொடுத்து அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் 7ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தபசில் சொத்தை எனக்கு பவர் கொடுக்கும் போது பட்டாவின் அடிப்படையில் தான் பவர் கொடுத்தார் என்றால் சரிதான். நான் பவர் வாங்கும் முன்பு தபசில் சொத்தின் மூல ஆவணங்களை பார்க்கவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் தபசில் சொத்துகள் காளிமுத்து நாயக்கரின் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பவர் வாங்குவதற்கு முன்பு பெருமாள்சாமி நாயக்கருக்கு தபசில் சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டதா அல்லது கிரைய மூலமாக பாத்தியப்பட்டதா என்பதற்கு எந்த ஆவணமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். தபசில்சொத்துக்கள் அனைத்தும் பெருமாள்சாமி நாயக்கருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றும், எந்த ஆவணங்களும் இல்லாமல் பட்டாவை மட்டும் வைத்து கிரையம் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ல் 2ம் பிரதிவாதி கையெழுத்தோ, கைரேகையோ வைக்கவில்லை என்றும், அது

எங்களால் பொய்யாக உருவாக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.2ல் காளியம்மாள் பணம் வாங்கியதாக காட்டப்பட்டுள்ளதா என்றால் பணம் வாங்கும் போது அவரும் உடன் இருந்து கைரேகை வைத்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் பணம் வாங்கும் போது காளியம்மாள் உடன் இருந்ததாக சொல்லவில்லை. காளியம்மாள் ஒருபோதும் பணம் வாங்கவில்லை என்றும், பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 எங்களால் பொய்யாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும், வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், 1ம் பிரதிவாதி கொடுத்த பவர் பத்திரங்கள் 2ம் பிரதிவாதியை கட்டுபடுத்தாது என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக பாத்தியப்பட்டது என்றும், அதில் 2ம் பிரதிவாதிக்கு பங்கு உண்டு என்றும், அவரை தரப்பினராக சேர்க்காமல் கிரையம் செய்ததது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்திலும், பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களிலும் காளியம்மாளுக்கு எவ்வளவு தொகையை கொடுத்தோம் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், 5ம் பிரதிவாதியான மனைவியும், 7ம் பிரதிவாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதியின் வயோதிகத்தை பயன்படுத்தி 2ம் பிரதிவாதியை மோசடி செய்யும் எண்ணத்தில் கிரையம் பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் அனைத்தும் வாதி மற்றும் 1 முதல் 4ம் பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் தான் உள்ளது என்றும், 1ம் பிரதிவாதி தனித்த அனுபவத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தபசில் சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பதற்காக வரி ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தபசில் சொத்துக்கள் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் கூட்டு அனுபவத்தில் இருப்பதால் தான் வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை

என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கும், எனது மனைவிக்கும் எழுதிக்கொடுத்த பவர் பத்திரமும், அதன் அடிப்படையில் 7 ம் பிரதிவாதிக்கு நான் பதிவு செய்து கொடுத்த கிரையமும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் அது ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**(8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை, 7ம் பிரதிவாதி தரப்பில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லாததால் 7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.